‘ஹட்கோ’ நிறுவனத்திடமிருந்து தன்னிறைவுத் திட்டத்தை 2003–2004ம் ஆண்டில் நிறைவேற்றுவதற்காக கடனுதவி பெறுவதற்கு ஆவணக் கட்டணமாகச் செலுத்துவதற்காக பனகல் குழுமத்திடமிருந்து பெறப்பட்ட ரூ.1.00 இலட்சத்தை பனகல் கட்டிட சங்கத்திற்கு திரும்பத் தருதல்.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.1) துறை**

அரசு ஆணை (1டி)எண்.47 நாள் : 25.01.2008

படிக்கப்பட்டவை :

1) அரசாணை (நிலை) எண்.310, ஊரக வளர்ச்சித் துறை நாள் 21.11.2003.

2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.79997/03/எஸ்.ஜி.எஸ்.2 நாள் 18.09.2006.

**ஆணை**

2003–2004ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, ஹட்கோ நிறுவனத்திடமிருந்து ரூ.2,000 இலட்சத்தினை கடனாகப் பெறுவதற்குரிய வகையில் விண்ணப்பக் கட்டணமாக செலுத்த வேண்டிய ரூ.1 இலட்சத்தினை பனகல் மாளிகை சங்க நிதியிலிருந்து உடனடியாக செலுத்திவிட்டு பின்னர் அரசு கணக்கிலிருந்து திரும்பப் பெற்று நேர் செய்திடவும் ‘ஹட்கோ’ நிறுவனம் விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்து கடன்பெறத் தேவையான நிர்வாக அனுமதி (Administrative Sanction) வழங்கி அரசு ஆணை (நிலை) எண்.310, ஊரக வளர்ச்சித்துறை நாள் 21.11.2003ல் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்கியது. மேற்குறிப்பிட்ட ஆணைக்கிணங்க, 2003–2004ல் விண்ணப்பக் கட்டணமாக ஊரக வளர்ச்சி இயக்குநரால் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம்) பனகல் கட்டிட சங்கத்திலிருந்து (Panagal Society) பெறப்பட்டு ஹட்கோ நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டது. இதனிடையே, அரசு 2003–2004ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்ற ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கடன்பெற வேண்டியதில்லை என்றும், அரசு மானியத்திலிருந்து தொகையை விடுவிக்கலாம் எனவும் முடிவு செய்தது. இதற்கிடையில் ‘ஹட்கோ’ நிறுவனத்தால் தன்னிறைவுத் திட்டத்திற்காக பெறப்படும் கடன் குறித்த ஆவணங்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு ரூ.20 கோடி தொகை, அந்நிறுவனத்தின் கடிதம் எண்.HUDCO/CHRO/RD/18229/2004, நாள் 27.2.2004ல் வழங்க ஒப்புதல் வழங்கியது என்றும், அதன் பின்னரே ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கடன்பெற வேண்டாம் என்று அரசு முடிவெடுத்தது என்றும் அதனால் விண்ணப்பக் கட்டணம் மற்றும் கூர்ந்தாய்வுக் கட்டணம் ஆகியவை ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கடன் அனுமதி அளித்த பிறகு திரும்பப்பெற இயலாது என்றும், அதனால் ஹட்கோ நிறுவனத்திற்கு விண்ணப்பக் கட்டணமாக வழங்கிய ரூ.1.00 இலட்சத்தினை திரும்பப்பெற இயலாத நிலை உள்ளது என்றும் தெரிவித்து ரூபாய் ஒரு இலட்சம் தொகை பனகல் சங்கத்திடமிருந்து பெறப்பட்டதால் அதை பனகல் கட்டிட சங்கத்திற்கு திரும்பச் செலுத்துவதற்கு ஏதுவாக ரூ.1.00 லட்சத்தை வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசிடம் கோரியுள்ளார்.

2) ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநரின் செயற் குறிப்பினை அரசு கவனமாக பரிசீலித்து ‘ஹட்கோ’ நிறுவனத்திடமிருந்து கடன் பெறவில்லை என்றாலும், ஏற்கனவே செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணமான ரூ.1 இலட்சத்தை ஹட்கோ நிறுவனத்திடமிருந்து திரும்பப் பெறப்பட இயலாததால், பனகல் கட்டிட சங்கத்திடமிருந்து பெற்ற அப்பணத்தை பனகல் கட்டிட சங்கத்திற்குத் திருப்பித் தரும்பொருட்டு ரூ.1.00 இலட்சத்தை (ரூபாய் ஒரு இலட்சம்) மட்டும் வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3) மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குக் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்."2515–00–ஏனைய ஊரக வளர்ச்சிப் பணிகள் – 800 – ஏனைய செலவு – பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் – JW தன்னிறைவுத் திட்டத்தினை நிறைவேற்றுதல் – 09 – உதவி மானியங்கள் – 02 – மூலதன செலவுக்கான மானியங்கள் – (து.தொ.கு.எண்.2515–00–800–JW 0925)"

4) மேலே பத்தி 2ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ளத் தேவையான நிதியொதுக்கம் திருத்திய/இறுதி திருத்த மதிப்பீடு 2007–2008ல் சேர்க்கப்படும். திருத்திய/இறுதி திருத்த மதிப்பீடு 2007–2008ல் நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், திருத்திய/இறுதி திருத்த மதிப்பீடு 2007–2008க்கான வரவு–செலவு திட்டக் கருத்துருக்களை அனுப்பும்பொழுது இச்செலவினத்தையும் சேர்த்து அனுப்பி வைக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இத்தொகையினைப் பெற்று பனகல் கட்டிட சங்கத்திற்கு (Panagal Building Society) திரும்பத் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 17/DS(APA)/2008, நாள் 25.01.2008ல் பெற்ற ஒத்திசைவுடன் மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கீடு பேரேடு (ASL) எண்.1731 (ஆயிரத்து எழுநூற்று முப்பத்து ஒன்று) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு செயலாளர்.